திரு. ஏ. எம். இராஜா : மாடி பஸ்களைக் கட்டுவதற்கு அதிகமான செலவு ஆகியிருக்கிறதே. சென்னை வழித்தடங்களில் அவற்றைச் சாதாரண பஸ்களாக வாவது மாற்றிவிடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவற்றை நெடுந்தூர வழித் தடங்களில் விடுவதில்லை என்று அரசு தீர்மானித்துவிட்டது. ஆகவே, இருக்கிற மாடி பாஸ்களை சாதாரண பஸ்களாக மாற்ற கிட்டத்தட்ட 4,35,600 ரூபாய் அனுமதித்து, அவைகளை எல்லாம் மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. மாடி பஸ்களை மாநகரங்களில் விடுவதில் சிக்கலும், சிரமங்களும் இருப் பதால் அப்படி விடுவதற்கில்லை.

திரு. எஸ். நல்லசாமி : பஸ்கள் தேச உடைமை ஆக்கப்பட்டதற்குப் பிறகு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பஸ்களைகூட சில தனியார்கள் நிறுத்தி விட்டார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நீங்கள் மூலக்கேள்வியை ஒட்டி மாடி பஸ்களைப்பற்றித்தான் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி ஏதேனும் குறை இருந் தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால். ஆவன செய்ய முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : மாடி பஸ்களுக்கு அதிகமான பணம் செலவழித்து சாதாரணமான பஸ்களாக மாற்றுவதைவிட அதை லக்சுரி கோச்சாகவே வைத்து, தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் அமைத்து, குழந்தைகளின் சுற்றுலாப் பயணத்திற்கு உபயோகப்படுத்தும் யோசனை நல்லது இல்லையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வந்தவாசிக்கு விரைவுப் பேருந்துப்பணி

* 460. வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-வேலூர், வந்தவாசி-உத்திரமேரூர்-சென்னை துரித வண்டி விட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : வந்தவாசிக்கும் சென்னைக்கும் அப்படி துரித பஸ் விடுகிற செயற்குறிப்பு இல்லை என்றாலும் திருச்சிக்குச் செல்கிற துரித பஸ்களை

யாவது காஞ்சிபுரம், வந்தவாசி, திண்டிவனம் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்வார்களா? அப்படிச் செய்வதன் மூலம் அதிகமானபேர்கள் பயன் அடைவார்கள் என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: குறிப்பாக சென்னையில் இருந்து 150, 200 மைல்களுக்குள் உள்ளவர்கள் துரித வண்டியைப் பயன்படுத்த விரும்புவதில்லை. காரணம் கட்டணம் அதிகமாக இருப்பதுதான். அதேநேரம் நீண்ட தூரம் போகிறபஸ்களை நெடுஞ்சாலையைவிட்டு இப்படி சுற்றுப்புற நகரங்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு போகச் செய்வதன்மூலம் அதில் பயணம் செய்கிறவர்களுக்கு கஷ்டமாக இருக்கும், சீக்கிரம், செல்வதற்கு இடையூறாக இருக்கும். ஆகவே அந்த யோசனையையும் ஏற்பதற்கில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பயணிகளைப் பற்றிச் சொன்னார்கள். நாகப்பட்டினம் செல்லுகிற பெருந்துகளில் நாகூர் போகிற பயணிகள் காஞ்சிபுரத்திலும், வந்தவாசியிலும் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். மேலும் இந்த வழித் தடத்தில் செல்லுவதால் நல்ல பாதை இருக்கிறது, மேலும் கூட 8 மைல் தான் ஆகிறது. ஆகவே, இதை அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே இது மைல் கணக்கிலே எடுக்கப்பட்டதல்ல. தேசிய நெடுஞ்சாலை இதர நெடுஞ்சாலை வேறுபாட்டைப் பொறுத்தது. வந்தவாசியில் உள்ளவர்கள் போகவேண்டுமானால் வேலூரிலிருந்து போக ஏதாவது தொலை தூர பஸ்கள் விடுவதற்கான நடவடிக்கை வேண்டுமானால் அரசு பரிசிலிக்கலாமே தவிர, சென்னையிலிருந்து நேராகச் செல்கிறவர்களை அந்த வழியாகப் போகச் சொல்வது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மு.ப. 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) அவையுரிமைப் பிரச்னை

டில்லி, 'தமிழ்நாடு இல்லம்' பற்றிய வினாவுக்கு பேரவையில் முதலமைச்சர் கூறிய பதிலைத் திரித்து 'தென்னகம்' நாளிதழ் வெளியிட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வீராசாமி 184-வது விதியின் கீழ் அவை முன் ஒரு பிரிவிலேஜ் இஷ்யூ கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பேரவையில் 17—3—1973-ம் நாளன்று, டில்லியிலுள்ள 'தமிழ் நாடு